# மகிளா நீதிமன்றம், பெரம்பலூர்

# அசல் வழக்கு எண்.19/2014

2019 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 05-ம் நாள் வியாழக் கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய பி.வா.சா.1 சின்னராசு என்பவரது குறுக்கு விசாரணை, திருமதி.கே.பழனியம்மாள், பெஞ்ச் கிளர்க் கிரேடு -1 என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமாணம் செய்து வைக்கப்படுகிறது.

**குறுக்கு விசாரணை வாதி தரப்பில்**

நான் 8ம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளேன். என்னுடன் பிறந்தவர்கள் 2 பேர். ஒரு அண்ணன், ஒரு தங்கை. என் அம்மா பெயர் சுடாமணி. அப்பா சின்னசாமி என்கிற முத்துவெங்கடாசல ரெட்டியார். சதாசிவ ரெட்டியார் என்னுடைய தாத்தா. சதாசிவ ரெட்டியார் ஆற்றில் கலிங்கை அமைத்துள்ளார். அதற்கு சதாசிவ ரெட்டியார் கல்கட்டு அணை என்று அரசாங்க பதிவேட்டில் உள்ளது. என்னுடைய தாத்தவிற்கு மளையாளபட்டி பகுதியில் தான் நிலங்கள் இருந்தன. எவ்வளவு நிலங்கள் இருந்தன என்பது எனக்கு தெரியாது. சதாசிவ ரெட்டியாருக்கு செல்லம்மாள், சின்னசாமி என்கிற முத்துவெங்கடாசல ரெட்டியார், துரைசாமி ரெட்டியார், ராமசாமி ரெட்டியார், மாணிக்கம் ஆகியோர் பிள்ளைகள். என்னுடைய அப்பா சின்னசாமி என்கிற முத்துவெங்கடாசல ரெட்டியார் எனக்கு 7 வயது இருக்கும்போது இறந்துவிட்டார். காமாட்சியம்மாள் என் தாயாரின் அம்மாள். காமாட்சியம்மாளின் கணவர் பெயர் கிருஷ்ணசாமி என்று நினைக்கிறேன். கிருஷ்ணசாமிக்கு 2 தாரமா என்று எனக்கு தெரியாது. கிருஷ்ணசாமிக்கு முதல் தாரம் மூலமாக 3 பிள்ளைகளா என்று எனக்கு தெரியாது. காமாட்சியம்மாள் 2வது தாரமா என்று எனக்கு தெரியாது. காமாட்சியம்மாளுக்கு ஆண் பிள்ளைகள் 4 பேர், பெண் பிள்ளைகள் 2 பேர். குப்புசாமி என்கிற முத்துரெட்டியார், தனகோடியம்மாள், சுடாமணி அம்மாள், துரைசாமி ரெட்டியார், பசுபதி ரெட்டியார், ராஜு ரெட்டியார் ஆகியோர் காமாட்சியம்மாளின் பிள்ளைகள். தனகோடி அம்மாளை நம்மகுறிச்சியில் திருமணம் செய்து கொடுக்கபட்டது. தனகோடி அம்மாளின் கணவர் ஒரு

வருடத்தில் இறந்துவிட்டார். தனகோடி அம்மாள் கணவர் இறந்தவுடன் தாய் வீட்டில் இருந்தார். அதன்பிறகு குப்புசாமி ரெட்டியாரும், தனகோடியம்மாளும் என் வீட்டிற்கே வந்துவிட்டனர். குப்புசாமி ரெட்டியாருக்கு திருமணமானது பற்றி எனக்கு தெரியாது. நான் பி.ரெங்கசாமி என்கிற வழக்கறிஞர் மூலம் என் மனைவிக்கு பிரிவு 148 சிபிசி யின் கீழ் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. 29.1.15 தேதியிட்ட நீதிமன்றத்தில் தற்போது காட்டபடும் ஆவணத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்து தான். அந்த கையெழுத்து மட்டும் வா.சா.ஆ. 39 ஆகும். (பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யபடுகிறது). இந்த ஆவணத்தை நான் என் வழக்கறிஞர் மூலமாக நீதிமன்றத்தில் கொடுத்துள்ளேன். வா.சா.ஆ.39 உண்மை தான் ஆனால் ஒத்துக்கொள்ளவில்லை. 13.6.1968 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகலை நீதிமன்றத்தில் ஆஜர் செய்துள்ளேன். ஆனால் அதை குறியீடு செய்யவில்லை. அதற்கான காரணத்தை சொல்ல தெரியவில்லை.

குறுக்கு விசாரணை வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதால் ஒத்தி வைக்கபடுகிறது.